சுருக்கம்

குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை – மதுரையிலுள்ள குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை – காவல் துறை கண்காணிப்பாளர் பணியிடத்தை 01.07.2021 முதல் 30.06.2022 வரையிலான ஓராண்டு காலத்திற்கு தொடர் பணி நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (ஜே1) துறை

அரசாணை (நிலை) எண்.63

நாள்:29.07.2021
ஸ்ரீ பிலவ வருடம் ஆடி – 13
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்கப்பட்டது:-

1) அரசாணை (நிலை) எண். 79, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 06.05.2008.
2) அரசாணை (டி) எண். 201, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 13.07.2009.
3) அரசாணை (நிலை) எண். 73, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 16.06.2010.
4) அரசாணை (நிலை) எண். 98, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 01.11.2011.
5) அரசாணை (நிலை) எண். 111, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 31.08.2012.
6) அரசாணை (நிலை) எண். 99, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 25.06.2013.
7) அரசாணை (நிலை) எண். 113, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 21.10.2014.
8) அரசாணை (நிலை) எண். 96, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 24.08.2015.
9) அரசாணை (2டி) எண். 41, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 06.07.2016.

(த.தி.பா)

10) அரசாணை (2டி) எண். 52, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (இ1) துறை, நாள் 31.07.2017.

11) அரசாணை (2டி) எண். 50, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (ஜே2) துறை, நாள் 03.09.2018.

12) காவல் துறை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.1236757/ம.ஒ.1 (2)/ 2021, நாள்.22.06.2021.

*********

**ஆணை :**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை பணியிடத்தை, காவல் துறை கண்காணிப்பாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை பணியிடமாக உயர்த்தி அரசு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டு முதல் பத்து வரை படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல்துறை கண்காணிப்பாளர் பணியிடத்தை தொடர்ந்து ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு செய்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே பதினொன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரையில் உள்ள குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல்துறை கண்காணிப்பாளர் பணியிடத்தை கடைசியாக 01.07.2018 முதல் 30.6.2021 வரை மூன்றாண்டுகளுக்கு பணி நீட்டிப்பு செய்து அரசு ஆணைவெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே பன்னிரெண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள், மதுரையில் உள்ள குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல்துறை கண்காணிப்பாளரின் தற்காலிக பணியிடத்தின் காலம் 30.06.2021 அன்றுடன் முடிவடைகிறது என்றும், அரசு இப்பதவியை ஒப்பளிப்பு செய்த காரணங்கள் மற்றும் அவசியம் தொடர்ந்து இருக்கின்ற காரணத்தினால் மதுரை காவல் துறை கண்காணிப்பாளர், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை பணியிடத்தை 01.07.2021 முதல் 30.06.2024 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் பணி நீட்டிப்பு செய்து அரசாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, மதுரை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் காவல்துறை கண்காணிப்பாளர் பணியிடத்தை 01.07.2021 முதல் 30.06.2022 வரை மேலும் ஓராண்டிற்கு தொடர் பணி நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் தொடர் பணி நீட்டிப்பு செய்யப்பட்ட பணியிடங்களின் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"3456 – 00 - நுகர்பொருள் வழங்கல் – 101 - ஆய்வு – மாநிலச் செலவினங்கள் - AA - கண்காணிப்புக் குழு – 301 - சம்பளங்கள்"
(த.தொ.கு 3456 00 101 AA 0108)
(IFHRMS 3456 00 101 AA 30100)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.29284/நிதி (கூ.உ.(ம)நு.பா)துறை/2021, நாள்:23.07.2021-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
காவல் துறை தலைமை இயக்குநர்,
தமிழ்நாடு, சென்னை – 4.
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை,
சென்னை – 35.
மாநில கணக்காயர், சென்னை – 6/18.
மாநில கணக்காயர் (CAS), சென்னை – 9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
நகல் :-
நிதி (கூ.உ.(ம).நு.பா) துறை, சென்னை – 9.
சிறப்புக்குழு,
கூ.உ.(ம)நு.பா(OP-II) துறை,
சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

30/7/21
**பிரிவு அலுவலர்.**